



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 277 | 31.03.2026 | TUESDAY | PANGUNI: 17 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 277 | 31.03.2026 | செவ்வாய்கிழமை | பங்குனி : 17 | விலை : ரூ.5/- |


## 200 சொன்னோம், அதைவிட

# "அதிக தொகுதிகளில் ஜெயிப்போம்!"

## முதல்வர் ஸ்டாலின் பேச்சு



சென்னை: மார்ச்.31-

நாங்கள் 200 தொகுதிகள் என்று சொன்னோம், இப்போது அதைவிட அதிக தொகுதிகள் வெல்வோம் என்று திமுக தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொளத்தூர் தொகுதியில் அவர் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு வெளியே வந்தார். பின்னர் வாகனத்தில் ஏறி புறப்பட்டார். அப்போது அவரை சூழ்ந்துகொண்டு நிருபர்கள் கேள்விகளை எழுப்பினர். அதற்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு;

நிருபர்; எத்தனை தொகுதிகளில் திமுக ஜெயிக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது?

முதல்வர் ஸ்டாலின்; நாங்கள் 200 என்று சொன்னோம். ஆனால் அதைவிட அதிகமாக தான் ஜெயிக்க போகிறோம். நேற்றைய தினம் தேர்தல் அறிக்கை வெளியிட்டதற்கு பிறகு, 200ஐ தாண்டு என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்திருக்கிறது.

நிருபர்; கொளத்தூர் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

முதல்வர் ஸ்டாலின்; நான் இப்போது ஒரு புக் (book) கொடுத்திருக்கிறேன். நான் இருந்த காலத்தில் எவ்வளவு செய்திருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன். வந்ததற்கு பின்னால் என்னவெல்லாம் செய்ய போகிறேன் என்று அதில் சொல்லி இருக்கிறேன்.

கேள்வி; தேர்தல் அறிக்கையை கொடுத்துள்ளீர்கள். அது எந்தளவுக்கு மக்களிடம் போய் சேர்ந்திருக்கிறது? எவ்வளவு நம்பிக்கை கொடுக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்கள்?

முதல்வர் ஸ்டாலின்; திமுக மீது மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே பெருமளவுக்கு பெரிய ஆதரவு கிடைத்திருக்கிறது.

கேள்வி; முதல் கையெழுத்து என்னவாக இருக்கும்?

முதல்வர் ஸ்டாலின்; அதை பாருங்கள்... முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான் கவர்னர் மாளிகையில் பதவியேத்துக்கிட்டு கோட்டைக்கு வந்து போடும்போது அப்போது சொல்கிறேன்.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்தார்.

## தேர்தல் அறிவிப்புக்கு பின் முதல்முறையாக தமிழகம் வரும் பிரதமர் மோடி; ஏப்.4ல் சென்னையில் பிரசாரம்



சென்னை: மார்ச்.31-

சட்டசபை தேர்தலை முன்னிட்டு, பிரதமர் மோடி ஏப்.3ம் தேதி சென்னை வருகிறார். ஏப்.4ம் தேதி அவர் மயிலாப்பூர் தொகுதியில் பிரசாரம் மேற்கொள்கிறார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கிய நிலையில், தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. முக்கிய கட்சிகளின் தலைவர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்து விட்டு, கையோடு தங்கள் தொகுதிகளை வலம் வர ஆரம்பித்துவிட்டனர்.

தமிழகத்தில் பாஜ வேட்பாளர்கள் பட்டியலை கட்சி மேலிடம் விரைவில் அறிவிக்க இருக்கிறது. இந் நிலையில் தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு பிரதமர் மோடி சென்னை வர உள்ளார். ஏப்.3ல் புதுச்சேரியில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு அவர் அன்றைய தினமே சென்னை வருகிறார்.

பின்னர், ஏப்.4ம் தேதி சென்னையில் பாஜ நிர்வாகிகளுடன் அவர் ஆலோசனை நடத்துகிறார். அதே நாளில் அவர் சென்னை மயிலாப்பூர் தொகுதியில் ரோடு ஷோ செல்கிறார். அங்கு போட்டியிட உள்ள பாஜ வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்கிறார்.

சட்டசபை தேர்தலுக்கு பின் முதல்முறையாக பிரதமர் மோடி தமிழகம் வருவதால் பாஜவினரும், கூட்டணிக் கட்சியினரும் உற்சாகம் அடைந்துள்ளனர்.



## விஜயின் சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா? வேட்பு மனுவில் வெளியானது முழு சொத்து விவரம்

சென்னை, மார்ச்.31-

தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யும்போது, அந்த வேட்பாளரின் சொத்து விவரங்கள், வேட்பாளர் மீது குற்ற வழக்குகள் உள்ளதா? என்பன உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் வேட்பு மனுவில் இடம்பெற்றிருக்கும். அந்த வகையில், தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய், இன்று பெரம்பூர் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

இந்நிலையில், விஜய் தனது வேட்பு மனுவில் தாக்கல் செய்த சொத்து விவரங்கள் தற்போது வெளியாகியுள்ளன. இதன்படி, விஜய்க்கு ரூ.404.58 கோடி அசையும் சொத்து உள்ளது எனவும், விஜய்யின் அசையா சொத்துகளின் நடப்பு சந்தை மதிப்பு ரூ.220.15 கோடி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன் பெயரில் குற்றவியல் வழக்குகள், தண்டனை பெற்ற வழக்குகள் எதுவும் இல்லை என்று விஜய் தெரிவித்துள்ளார். மேலும், விஜய் லயோலா கல்லூரியில் பி.எஸ்.சி. படிப்பை முடிக்காமல் இடையில் நின்றுவிட்டார் என்று வேட்பு மனுவில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய்யின் மனைவி சங்கீதா பெயரில் ரூ.15.51 கோடி அசையும் சொத்து இருப்பதாக விஜய் தனது வேட்பு மனுவில் தெரிவித்துள்ளார். விஜய்யின் மனைவி வசம் ரூ.4.07 கோடியில் 3,132 கிராம் தங்கம், ரூ.1 கோடி மதிப்பில் 134.91 காரட் வைரம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய்யின் மகன், மகள் வங்கி கணக்கில் ரூ.4 லட்சம் உள்ளது. விஜய்யின் பூர்வீக சொத்தின் மதிப்பு ரூ.21.83 கோடி என தெரிவிக்கப்பட்டுள்ளது. விஜய்யின் வங்கி கணக்கில் ரூ.220 கோடி உள்ளதாகவும், அவரது மனைவி சங்கீதாவின் வங்கி கணக்கில் ரூ.10.43 கோடி உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விஜய்யின் கையில் ரூ.2 லட்சம் ரொக்கம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

202425ல் மட்டும் த.வெ.க. தலைவர் விஜய்க்கு ரூ.184 கோடி வருமானம் கிடைத்துள்ளதாக வேட்பு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விஜய் வைத்திருக்கும் கார்களின் மதிப்பு ரூ.7.45 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜய்யிடம் ரூ.15 லட்சம் மதிப்புள்ள வெள்ளி, ரூ.1.20 கோடி மதிப்பிலான தங்கம் உள்ளது. விஜய் மனைவியிடம் 2 கிலோ வெள்ளி, ரூ.4 கோடி மதிப்பிலான தங்கம், ரூ.1 லட்சம் ரொக்கம் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் விஜய்யின் மொத்த வருமானம் ரூ.734.45 கோடி என்றும், பல்வேறு தனி நபர்கள், நிறுவனங்களுக்கு விஜய் சுமார் ரூ.76 கோடி கடன் வழங்கியுள்ளார் என்றும் அவரது வேட்பு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அதிமுக Vs அண்ணாமலை....

## மோதலில் முடிந்த முடிவும், ஒதுக்கப்பட்ட தலைவரும்!

### ஒரு வியூகப் பார்வை



தமிழக பாஜகவின் அசுர வளர்ச்சியைத் தன் தோளில் சுமந்தவர் என்று ஒரு தரப்பாலும், அதிமுகவுடனான 30 ஆண்டுகாலப் பந்தத்தை முறித்தவர் என்று மறுதரப்பாலும் விமர்சிக்கப்படும், தமிழக பாஜகவின் முகமாக அறியப்பட்ட அண்ணாமலை, தற்போது தேசிய அரசியலிலோ அல்லது மாநில அரசியலிலோ முன்னால் தெரியாமலிருப்பது பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

### 1. தனி ஆளுமையும்.. டெல்லி கவலையும்!

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக கூட்டணி தமிழகத்தில் ஒரு இடத்தைக் கூட வெல்லவில்லை. குறிப்பாக, அதிமுகவுடன் கூட்டணி முறிந்ததற்கு அண்ணாமலையின் பிடிவாதமான போக்கே காரணம் என டெல்லி தலைமை கருதுவதாகச் சொல்லப்படுகிறது.

பாஜக என்பது எப்போதும் 'கட்சி'க்கு முன்னால் 'நபர்' வருவதை விரும்புவதில்லை. ஆனால், தமிழகத்தில் "பாஜக = அண்ணாமலை" என்ற பிம்பம் உருவானது. இது ஆர்.எஸ்.எஸ் மற்றும் டெல்லி மேலிடத்திற்கு ஒருவித நெருடலை ஏற்படுத்தியது. கட்சியை விடத் தனிநபரின் புகழ் ஓங்குவது எதிர்காலத்தில் சிக்கலை உருவாக்கும் எனத் தலைமை கணித்தது.

### 2. ஆக்ரோஷ அரசியல் VS நிதான அரசியல்:

அண்ணாமலையின் அரசியல் பாணி மிகவும் ஆக்ரோஷமானது. இது இளைஞர்களை ஈர்த்தாலும், பாரம்பரிய அரசியல் கட்சிகளுடனான உறவைச் சிதைப்பதாகப் புகார்கள் எழுந்தன. குறிப்பாக, மூத்த தலைவர்களை அவர் கையாளும் விதம் குறித்து டெல்லிக்கு அனுப்பப்பட்ட 'நெகட்டிவ்' ரிப்போர்ட்கள் அவருக்குச் பின்னடைவை ஏற்படுத்தின. 2026 சட்டமன்றத் தேர்தலில் பலமான கூட்டணி அமைந்தால் மட்டுமே வெற்றி சாத்தியம் என்பதால், "மென்மையான" ஒரு அணுகுமுறையை நோக்கி பாஜக நகர விரும்பியது.

### 3. ஆக்ஸ்போர்டு ஒரு கௌரவமான வழிமுறை!

2026 தேர்தலுக்கு முன் அவரை மீண்டும் கொண்டு வருவதா அல்லது புதிய தலைமையைக் கொண்டு வருவதா என்பதைத் தீர்மானிக்க டெல்லிக்குக் கால அவகாசம் தேவைப்பட்டது. கட்சிக்கு முன்னால் தனிநபர் புகழ் ஓங்குவதை டெல்லி விரும்பாது என்பதற்கு அண்ணாமலையே ஒரு சாட்சி. நேரடியாகப் பதவியைப் பறித்தால் தொண்டர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்படும். எனவே, 'மேற்படிப்பு' என்ற கௌரவமான காரணத்தைக் காட்டி, அவரைத் தமிழக அரசியலில் இருந்து தற்காலிகமாக விலக்கி வைத்ததே டெல்லியின் ராஜதந்திரம்.

அண்ணாமலை லண்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உயர்கல்விக்காகச் சென்றார். அது கட்சித் தலைமையால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு 'கூலிங் பீரியட்' (Cooling Period) என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

### 4. இரண்டாம் கட்டத் தலைவர்களின் எழுச்சி:

இதன் மூலம் புதிய ஒருங்கிணைப்புக் குழுவை எச்.ராஜா தலைமையில் உருவாக்கி, மற்ற கட்சிகளுடன் இணக்கமான உறவை வளர்க்க பாஜக திட்டமிட்டது. அண்ணாமலை இல்லாத நேரத்தில், சுதாகர் ரெட்டி, எச். ராஜா போன்ற மூத்த தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் செயல்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது கட்சியில் 'தனிநபர் அதிகாரம்' குறைவதைக் காட்டுகிறது.

### 5. பிரதமரின் கோயம்புத்தூர் வருகையும்.. அண்ணாமலையின் புறக்கணிப்பும்!

பொதுவாக, பிரதமரின் வருகையின் போது மாநிலத் தலைவர்கள் அல்லது முக்கியத் தலைவர்கள் முன்னால் நிற்பது வழக்கம். பிரதமர் மோடி கேரளப் பரப்புரைக்காகக் கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கு வந்தபோது, அண்ணாமலை அங்கு இல்லை. இது சாதாரணச் செய்தி அல்ல, ஒரு மிகப்பெரிய புறக்கணிப்பு. இது அவர் டெல்லி தலைமை மீது கொண்டிருந்த கடும் அதிருப்தியின் வெளிப்பாடாகும்.

### 6. காத்திருப்பாரா அல்லது களம் இறங்குவாரா?

அண்ணாமலைக்கு ஒதுக்கப்பட்ட சில தொகுதிகள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளதாகவும், மேலிடத்துடன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அண்ணாமலை "ஒதுக்கப்படவில்லை", மாறாக "மறுசீரமைப்பு" செய்யப்படுகிறார் என்பதே தற்போதைய யதார்த்தம். அண்ணாமலையின் அத்தியாயம் முடிந்துவிடவில்லை. அவர் ஒரு 'ஸ்பேர் வீல்' போல டெல்லியால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளார். 2026சட்டமன்றத் தேர்தலுக்குப் பின், அவர் மீண்டும் ஒரு புதிய வியூகத்துடன் வரலாம் அல்லது தேசிய அளவில் ஒரு புதிய பொறுப்பை ஏற்கலாம் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.




■ புதுச்சேரி அரசின் போக்குவரத்து கழகம் மூலம் இயக்கப்படும் பேருந்துகளில் பயணிகளுக்கு வழங்கப்படும் பயணச் சீட்டில், வாக்காளர் விழிப்புணர்வு செய்திகள் அடங்கிய பயணச்சீட்டு வெளியீட்டு விழா நடைபெற்றது. "அவசியம் வாக்களிப்போம்" என்ற கருத்தினை வலியுறுத்தி வழங்கப்படும் பேருந்து பயணச்சீட்டினை மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் வெளியிட்டார். விழாவில், புதுச்சேரி மாநில அரசு போக்குவரத்து கழகத்தின் பொது மேலாளர் அருணாச்சலம் மற்றும் போக்குவரத்து கழக பேருந்து நடத்துனர்கள் உடன் இருந்தனர். நிகழ்ச்சியினை மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் வாக்காளர் விழிப்புணர்வு பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.





## "பாஜக ஓட்டுத் திருட்டு.. அதிமுக ரோடுத் திருட்டு!" 44, 45வது வார்டுகளில் முறைகேடுசையது முஸ்தபா பகிரங்கப் புகார்

திருப்பூர்மார்ச். 31- திருப்பூர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி அலுவலகத்தில், வடக்கு மாவட்டத் தலைவர் சையது முஸ்தபா தலைமையில் மாவட்டச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக வேட்பாளர்களுக்கு முழு ஆதரவு அளிப்பது என ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருப்பூர் தெற்கு, வடக்கு, அவிநாசி, பல்லடம் மற்றும் பெருந்துறை, சூலூர் தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் திமுகவின் வெற்றிக்காகத் தேர்தல் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுப் பணிகள் தீவிரப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. செய்தியாளர்களிடம் பேசிய சையது முஸ்தபா, "பாஜக ஓட்டுத் திருட்டில் ஈடுபடுவது போல, அதிமுக ரோடுத் திருட்டில் ஈடுபடுகிறது. குறிப்பாகத் திருப்பூர் மாநகராட்சியின் 44 மற்றும் 45வது வார்டுகளில் இந்த ரோடுத் திருட்டு நடந்துள்ளது. இதற்கு இந்தத் தேர்தலில் மக்கள் அவர்களுக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள்" என்று மிகக் கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்தார். இந்நிகழ்வில் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு, தேர்தல் களப்பணிகள் குறித்து விரிவாக ஆலோசித்தனர்.

## "மதுரையில் கூடப்போகும் மக்கள் கடல்!" சித்திரைத் திருவிழா பாதுகாப்பு குறித்து மாவட்ட ஆட்சியர் முக்கியக் கூட்டம்



மதுரை மார்ச் 31: உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சித்திரைத் திருவிழா நெருங்கி வரும் நிலையில், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த உயர்மட்டக் கலந்தாய்வுக் கூட்டம் மதுரையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாநகர காவல் ஆணையர் முனைவர் லோகநாதன் முன்னிலை வகித்தார். மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம், திருத்தேரோட்டம், கள்ளழகர் எதிர்சேவை மற்றும் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல் போன்ற முக்கிய நிகழ்வுகளின் போது லட்சக்கணக்கான பக்தர்கள் திரள்வார்கள் என்பதால், அவர்களுக்குத் தேவையான குடிநீர், சுகாதார வசதிகள் மற்றும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் வடக்கு, தெற்கு மற்றும் போக்குவரத்துப் பிரிவு காவல் துணை ஆணையர்கள், வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்துகொண்டனர். போக்குவரத்து நெரிசலைச் சீர்செய்யவும், முக்கிய இடங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் புறக்காவல் நிலையங்கள் அமைப்பது குறித்தும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் நாதக வேட்பாளர் வேட்பு மனு தாக்கல்

சங்கரன்கோவில், மார்ச்,31-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதியில் 30.03.2026 அன்று நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கவிதா வேட்பு மனு தாக்கல் செய்ய மேள தாளங்களுடன் வந்து திராவிட மாடல் வண்டியின் மேல், குடங்களில் கனிம வளக் கொள்ளை, குழந்தைகள் கற்பழிப்பு, ஜாதி வெறி, மதவெறி, வாசகங்களாக எழுதப்பட்டு தொண்டர்கள் கழக நிர்வாகிகளுடன் பிரச்சாரம் செய்தார். பின்னர், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மு.கவிதா கோட்டாட்சியர் அலுவலகத்திற்குள் சென்று சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினருக்கான வேட்பு மனு உறுதி மொழி ஆவணத்தை சங்கரன்கோவில் கோட்டாட்சியர் ஆ. அனிதாவிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

## தொண்டர்கள் வெள்ளத்தில் நீந்திய அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணிக்கு மேளதாளத்துடன் ராயல் வரவேற்பு



திண்டுக்கல் மார்ச் 31: 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுகவின் வெற்றி வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்ட திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களில் திமுக சார்பாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், வேடசந்தூர் வீரா. சாமிநாதன், நிலக்கோட்டை நாகஜோதி மற்றும் நத்தம் தொகுதி செல்வகுமார் ஆகியோர் வந்தே பாரத் ரயில் மூலம் திண்டுக்கல் வருகை தந்தனர்.

*விண்ணதிரும் வரவேற்பு:* சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றுத் திரும்பிய இவர்களை வரவேற்க, திண்டுக்கல் ரயில் நிலையத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் திரண்டனர். ரயில் நிலையத்தில் இருந்து மாவட்ட திமுக அலுவலகம் வரை வழிநெடுகிலும் தொண்டர்கள் பூக்கள் தூவியும், மேளதாளங்கள் முழங்கியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

*நெகிழ்ச்சியான தருணம்:* வரவேற்பு நிகழ்ச்சியின் போது, அந்த வழியாக வந்த இரண்டு ஆம்புலன்ஸ்களைக் கண்ட திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், உடனடியாகத் தனது வரவேற்பு நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு, ஆம்புலன்ஸ்கள் செல்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தார். இக்கட்டான சூழலிலும் அவர் காட்டிய இந்த மனிதநேயம் அங்கிருந்த பொதுமக்களை வெகுவாகக் கவர்ந்தது. இந்நிகழ்வில் திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவை தலைவர் வழக்கறிஞர் காமாட்சி; துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், மார்கிரேட்மேரி, மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர் ஜெயன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.தண்டபாணி, ஆத்தூர் க.நடராஜன், மேற்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் மோகன், பொருளாளர் சாணார்பட்டி விஜயன், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், திமுக ஒன்றிய செயலாளர்கள் ரெட்டியார்சத்திரம் ப.க.சிவகுருசாமி,திமுக மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள் எனப் பெரும் பட்டாளமே கலந்துகொண்டு வெற்றி வேட்பாளர்களுக்குச் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.



■ மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க, மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் ஒத்தக்கடையில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிமனையை அமைச்சர், பி. மூர்த்தி திறந்து வைத்தார். மேலும் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகளுடன் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் திமுக முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டார்கள்.



## "தமிழக அரசைச் சுழற்றும் 12 தீர்மானங்கள்!" விலைவாசி உயர்வு, சட்டம்ஒழுங்கு சீர்கேடு குறித்து கொங்கு பேரவை கடும் கண்டனம்

கோவை மார்ச் 31: கோவையில் உள்ள எஸ்.பி.ஆர். அரங்கில் இன்று மாநில கொங்கு பேரவையின் மாநிலப் பொதுக்குழு கூட்டம், மாநிலத் தலைவர் எஸ்.பி. ராஜேந்திரன் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது. மாநிலப் பொதுச்செயலாளர் கொங்கு கே. தேவராஜ் வரவேற்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கில் திரளாகக் கலந்துகொண்டனர்.

*12 முக்கியத் தீர்மானங்கள்:* தமிழக அரசின் கடன் சுமை, விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு, சீர்குலைந்து வரும் சட்டம்ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு குறித்த அச்சம், போதைப்பொருள் புழக்கத்தைத் தடுத்தல் மற்றும் வேலைவாய்ப்பில் வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட 12 வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, வரும் தேர்தலில் அதிமுக கூட்டணியை முழுமையாக ஆதரிப்பதென்றும், மீண்டும் எடப்பாடியார் ஆட்சியை அமர வைக்கக் கொங்கு பேரவை பாடுபடும் என்றும் முக்கிய அரசியல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக, தகவல் தொழில்நுட்பப் பிரிவு செயலாளர் செல்வபிரபு நன்றி கூற, கூட்டம் இனிதே நிறைவுற்றது.



## தமிழகத்தில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனையில் இதுவரை ரூ.296.40 கோடி பணம், பொருட்கள் பறிமுதல்

சென்னை, மார்ச்.,31-

சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, தமிழகத்தில் இன்று வரை (மார்ச் 30) உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.296.40 கோடி மதிப்பிலான பணம், பரிசுப் பொருட்களைப் பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர் என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: 2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதன் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் பல்வேறு தரப்பினருக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 234 தொகுதிகளிலும், வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான முதற்கட்டப் பயிற்சி 28.03.2026 மற்றும் 29.03.2026 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இப்பயிற்சித் திட்டத்தில், 3,32,231 அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களின் கடமைகள், பங்களிப்புகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான பாடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. தேர்தல் தொடர்பான பணிகளைத் திறம்பட நிர்வகிப்பதற்கான அவர்களின் திறனை வலுப்படுத்தவும், நடைமுறைகளைச் சரியாகச் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும், சட்டத்திற்கு உட்பட்டு 2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் நடத்துவதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்வதை உறுதி செய்வதே இந்தப் பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும். அனைத்து தொகுதிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் குழுக்கள், 24ஜ்7 நேரமும் தீவிரமாகக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. 30.03.2026 அன்றைய நிலவரப்படி, இக்குழுக்களால் கைப்பற்றப்பட்ட பொருட்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இன்று ( மார்ச் 30) வரை பறிமுதல் செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு: ரொக்கமாக ரூ.61.98 கோடியும், மதுபானம் ரூ. 1.17 கோடி மதிப்பிலும், போதைப்பொருட்கள் ரூ.8.39 கோடி மதிப்பிலும், தங்கம்/வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்கள் ரூ.197.35 கோடி மதிப்பிலும் மற்றும் இதர பொருட்கள்/ இலவசங்கள் ரூ. 27.51 கோடி மதிப்பிலும் என மொத்தம் ரூ.296.40 கோடி மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடுமலை எலையமுத்தூர் ஊராட்சி நிர்வாகிகள் 30க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர்



உடுமலை மார்ச். 31- திருப்பூர் மாவட்டம் உடுமலை கிழக்கு ஒன்றியம், எலையமுத்தூர் ஊராட்சியில் ஆளுங்கட்சியான திமுகவிற்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில், அக்கட்சியின் முக்கிய நிர்வாகிகள் 30க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான வருங்கால தமிழகத்தை உருவாக்க, திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான சி. மகேந்திரன் வி.லி.கி முன்னிலையில் இந்த இணைப்பு விழா நடைபெற்றது. உடுமலை கிழக்கு ஒன்றியம், எலையமுத்தூர் ஊராட்சி, திமுகவை சேர்ந்த கிளை கழக செயலாளர் ஜெயபிரகாஷ், மு.ஒன்றிய கவுன்சிலர், ஒன்றிய மகளிரணி து.அமைப்பாளர் தங்கமணி ஜெயபிரகாஷ், ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் ரமேஷ் குமார், ஒன்றிய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செல்வராஜ், ஈஸ்வரன், அருண்குமார், கதிரவன், ரித்திஷ், பரணிதரன், கோபிநாத், தங்கவேல் மாசிலாமணி, தங்கராஜ், ஆண்டிக்காடு தங்கராஜ், வாசு, செல்லமுத்து, சுஜித், கிஷோர், நிதிஷ், மயில்சாமி, கருப்பசாமி, பரமேஸ்வரன், சவுந்தர், மதன்குமார், ஜீவா, குமார், ராமன், லட்சுமணன், சரவணன், காமராஜ், தாமரைச்செல்வன், ரமேஷ், செல்வராஜ், மகேஷ் குமார், அருள்ஜோதி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்டோர் தங்களை, தங்களை அதிமுகவின் அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது உடுமலை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ராஜசேகரன், ஒன்றிய அவைத் தலைவர் பஞ்சலிங்கம், ஒன்றிய விவசாய பிரிவு செயலாளர் ரத்தினசாமி மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக உடனிருந்தனர்.

# குவைத் மின் நிலையம் மீது ஈரான் தாக்குதல்: இந்திய தொழிலாளி உயிரிழப்பு



புதுடெல்லி, மார்ச்.,31-
குவைத் நாட்டின் மின் நிலையம் மீது ஈரான் மேற்கொண்ட தாக்குதலில் இந்தியாவை சேர்ந்த தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். இதனை குவைத்தின் மின்சார அமைச்சகம் உறுதி செய்துள்ளது. அதேநேரத்தில் தங்கள் நாட்டின் வடக்கு பிராந்தியத்தில் உள்ள தப்ரிஸ் பெட்ரோகெமிக்கல் அமைப்பின் மீது எதிர்தரப்பினர் தாக்குதல் மேற்கொண்டதாக ஈரான் தெரிவித்துள்ளது. அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் ஒரு மாதத்தை கடந்துள்ளது. கடந்த பிப்ரவரி 28ம் தேதி ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து கூட்டு தாக்குதல் நடத்தியது இந்த மோதலின் தொடக்கமாக அமைந்தது. இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது. இதன் எதிரொலியாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், இஸ்ரேல் மீதும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீதும் ஈரான் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதல் இப்போது அமெரிக்க மற்றும் இஸ்ரேல் அதிகாரிகளின் குடியிருப்பு மீது நடத்தப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது. தாக்குதல் விரிவு செய்யும் நோக்கில் இந்த முடிவு என ஈரான் இதை சொல்லியுள்ளது. அதே நேரத்தில் தரைவழி தாக்குதலுக்காக அமெரிக்க ராணுவ வீரர்கள் தயாராகி வருகின்றனர். இந்தியர் உயிரிழப்பு: இந்த சூழலில் குவைத் நாட்டில் உள்ள மின் நிலையம் மீது தாக்குதல் நடத்தியது. இதை திங்கட்கிழமை (மார்ச் 30) அன்று குவைத் அரசு உறுதி செய்தது. "குவைத் அரசுக்கு எதிராக ஈரான் மேற்கொண்டுள்ள தாக்குதலின் ஒரு பகுதியாக, மின் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலைய சேவை கட்டிடத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் இந்தியாவை சேர்ந்த தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். மேலும், அந்த கட்டிடம் பெரிய அளவில் சேதமடைந்தது" என்று குவைத் மின்சார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் பாத்திமா அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

# மக்களோடு மக்களாக நான்!" வாசுதேவநல்லூர் தொகுதி எனக்குப் புதியது அல்ல; வேட்பாளர் ராஜா உருக்கமான பேட்டி



வாசுதேவநல்லூர், மார்ச்.,31-
ரயில் நிலையத்திற்கு வெளியே பத்திரிக்கையாளர்களிடம் வேட்பாளர் ராஜா பேசும் போது வாசுதேவநல்லூர் தொகுதி ஒன்று எனக்கு புதிது அல்ல, நான் தொடர்ச்சியாக கடந்த ஐந்து ஆண்டுகாலம் அனைத்து அரசு நிகழ்ச்சியிலும் மாவட்ட செயலாளராக பொது மக்கள், கட்சி நிர்வாகிகளின் சுக துக்க நிகழ்வில் பங்கேற்று உள்ளேன், ஆகவே நான் தொகுதிக்கு புதியவனும் இல்லை, மக்களும் என்னை புதிதாக பார்க்க மாட்டார்கள். வருகிற சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்திற்கு 4 ம் தேதி தமிழக முதல்வர் சங்கரன் கோயிலுக்கு பிரசாரத்திற்கு வருகை தர இருக்கிறார்கள். தொடர்ந்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மண்டல பொறுப்பாளர் கனிமொழி மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் மதிமுக வைகோ, தேமுதிக பிரேமலதா உட்பட பல்வேறு கட்சி தலைவர்கள் நிர்வாகிகள் வருகை தர இருக்கிறார்கள். ஆகவே வெற்றி உறுதி. களம் நமக்கானது தான் என்றார். அருகில் மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் செண்பக விநாயகம், மாவட்ட பொருளாளர் இல சரவணன், புளியங்குடி மேற்கு பகுதி நகர செயலாளர் அந்தோணிசாமி, மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் மைதீன், மற்றும் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கிளைக் கழக வார்டு பிரதிநிதிக ஜின் உட்பட பலர் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



# 2026ல் தனி ரூட்! ஓ.பி.சி. மக்கள் உரிமை கட்சி தலைவர் ரத்தினசபாபதி அறிவிப்பு

கோவை மார்ச் 31 வரவிருக்கும் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைக்காமல், ஓ.பி.சி. மக்கள் உரிமை கட்சி தனித்துப் போட்டியிடும் என்று அக்கட்சியின் தலைவர் ரத்தினசபாபதி கோவையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். கூட்டத்தில் பேசிய ரத்தினசபாபதி, "மத்திய மற்றும் மாநில அரசுகள் ஓ.பி.சி. மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 27% இடஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்தவில்லை. பல அரசுப் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன. அரசியல் கட்சிகள் ஓ.பி.சி. மக்களின் உரிமைகளை வெறும் தேர்தல் வாக்குறுதிகளாக மட்டுமே பார்க்கின்றன" என்று கடுமையாகக் குற்றம்சாட்டினார். ஓ.பி.சி. பட்டியலில் உள்ள இன்னும் முன்னேற்றம் அடையாத சமூகங்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக நீதியைச் சட்டமன்றத்தில் வலுவாக ஒலிக்கச் செய்வதே இக்கட்சியின் முக்கிய இலக்கு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாநிலம் முழுவதும் வேட்பாளர்களைக் களம் இறக்க அக்கட்சி முடிவு செய்துள்ளது.



# ரேஷன் கடைகள், பெட்ரோல் பங்க்குகள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம்
## மத்திய அரசு அனுமதி

புதுடெல்லி, மார்ச்.,31-
எல்பிஜி தட்டுப்பாட்டை சமாளிக்கும் நடவடிக்கையாக, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 21 மாநிலங்களில் வீட்டுப் பயன்பாட்டிற்காக மண்ணெண்ணெய்யை மத்திய அரசு தற்காலிகமாக ஒதுக்கியுள்ளது. மேலும், பெட்ரோல் விற்பனை நிலையங்கள் மூலமும் மண்ணெண்ணெய் விற்பனை செய்யவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 29 அன்று வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பின்படி, மத்திய அரசு பெட்ரோலியப் பாதுகாப்பு மற்றும் உரிம விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளது. இதன் மூலம், மண்ணெண்ணெய் பயன்பாடு இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்ட டெல்லி, ஹரியானா, உத்தரப் பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட 21 மாநிலங்களில் பொது விநியோகத் திட்டம் மூலமாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி, அரசால் நியமிக்கப்படும் பெட்ரோல் நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்க அனுமதிக்கப்படும். இதன்படி ஒவ்வொரு பெட்ரோல் விற்பனை நிலையமும் 5,000 லிட்டர் வரை மண்ணெண்ணெயை இருப்பு வைக்கலாம். இதற்காக, மாநில அரசுகள் மூலம் ஒரு மாவட்டத்திற்கு அதிகபட்சம் இரண்டு பெட்ரோல் பங்குகள் நியமிக்கப்படும். தொடர்ந்து நிலவி வரும் உலகளாவிய நெருக்கடியால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ள நிலையில், வீடுகளுக்கு அத்தியாவசிய எரிபொருள் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஏற்கெனவே உள்ள எரிபொருள் விநியோக வலையமைப்பின் மூலம் விரைவான விநியோகத்தை எளிதாக்கும் வகையில், தற்போதுள்ள பெட்ரோல் விற்பனை நிலையங்களில் மண்ணெண்ணெயை இருப்பு வைக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. இது 60 நாட்களுக்கு அல்லது மறு அறிவிப்பு வரும் வரை செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராணுவத்திடம் 2,000 துப்பாக்கிகள் ஒப்படைப்பு அதானி டிஃபென்ஸ் நிறுவனம் சாதனை



குவாலியர், மார்ச்.,31-
மத்திய அரசின் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 2,000 பிரஹார் இலகு ரக இயந்திரத் துப்பாக்கிகளின் (எல்எம்ஜி) முதல் தொகுதியை இந்திய ராணுவத்திடம் அதானி டிஃபென்ஸ் அண்ட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் ஒப்படைத்து உள்ளது. இது குறித்து அதானி டிஃபென்ஸ் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி ஆசிஷ் ராஜ்வன்ஷி கூறும்போது, "இஸ்ரேல் வெப்பன் இண்டஸ்ட் ரீஸின் தொழில்நுட்பக் கூட்டாண்மையுடன் இந்தத் துப்பாக்கிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 40,000 துப்பாக்கிகளை தயாரிப்பதற்கான இந்த ஒப்பந்தத்தில், முதல் தொகுதியை ஒப்பந்தக் காலத்திற்கு 11 மாதங்களுக்கு முன்னதாகவே அதானி நிறுவனம் விநியோகித்துள்ளது. வெறும் உதிரி பாகங்கள் தயாரிப்பாளர் என்ற நிலையிலிருந்து ஆயுதத் தயாரிப்பு நிறுவனமாக உருவெடுத்துள்ளோம். ஆண்டுக்கு ஒரு லட்சம் துப்பாக்கிகளைத் தயாரிக்கும் திறன் குவாலியர் ஆலைக்கு உள்ளது" என்றார். பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஏ.அன்பரசு பேசுகையில், "காலக்கெடுவுக்கு முன்னதாகவே ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது, இந்திய பாதுகாப்புத் துறை சூழலுக்கு மிக முக்கியம். தொழில் கூட்டாளிகளுக்கு அரசு தோளோடு தோள் நின்று உதவும்" என்றார். இஸ்ரேல் வெப்பன் இண்டஸ்ட்ரீஸ் தலைமைச் செயல் அதிகாரி ஷுகி ஸ்வார்ட்ஸ் கூறுகையில், "இஸ்ரேலில் 'நெகேவ்' எல்எம்ஜி என அழைக்கப்படும் இந்தத் துப்பாக்கிகள் இந்திய ராணுவத்தின் வலிமையை மேலும் வலுப்படுத்தும். இந்தியத் தேவைகளுக்கான எங்களது விநியோகத்தில் எந்தப் பாதிப்பும் இருக்காது" என்றார்.



■ திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற தேர்தலில், நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் கிரிஜா தாமரை பாண்டியன், விவசாயி போன்று தலையில் பச்சை கலர் துண்டு அணிந்து, தொண்டர்கள் கையில் வட்டா ஜல்லி, காலி குடங்கள் போன்ற பொருட்களுடன் மேளதாளத்துடன் வந்து வித்தியாசமான முறையில் வேட்பு மனு தாக்கல்.

# மிக்29 போர் விமானத்தில் அதிநவீன அஸ்ராம் ஏவுகணை



புதுடெல்லி, மார்ச்.,31-
இந்திய விமானப் படையில் உள்ள மிக்29 போர் விமானத்தில் நவீன அஸ்ராம் ஏவுகணைகள் இணைக்கப்பட உள்ளன. இந்திய விமானப்படையில் மிக்29 ரக போர் விமானங்களின் 2 படைப் பிரிவுகள் உள்ளன. இந்த விமானங்களில் எதிரி நாட்டு போர் விமானங்களை தகர்க்கும் வான் தாக்குதலுக்கு ரஷ்ய தயாரிப்பான ஆர்73 ரக ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இது 10 முதல் 15 கி.மீ தூரம் மட்டும் சென்று தாக்கும். விமானப் படையில் உள்ள தேஜஸ் மற்றும் ஜாகுவார் போர் விமானங்களில் அதிநவீன அஸ்ராம் ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஐரோப்பிய தயாரிப்பான இந்த ஏவுகணைகள் 25 கி.மீ தூரம் சென்று தாக்கும் திறன் படைத்தவை. இந்த வகை ஏவுகணைகளை மிக்29 ரக போர் விமானங்களில் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மிக்29 ரக போர் விமானத்தில் சில மாற்றம் செய்யப்பட வேண்டும். மேம்படுத்தப்பட்ட மிக்29 ரக போர் விமானத்தில், பயன்படுத்த அஸ்ராம் ஏவுகணைகளை எபிடிஏ நிறுவனத்திடம் இருந்து வாங்க பாதுகாப்பு அமைச்சகம் ஆர்டர் கொடுக்க உள்ளது. இதற்கான ஒப்பந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது. இதன் மூலம் மிக்29 ரக போர் விமானத்தின் தாக்குதல் திறன் மேம்படும்.

# ஈரான் போர் நெருக்கடி இந்தியாவைப் பாதிக்காதிருக்கட்டும்!

இந்தியா, மார்ச்.,31-
மேற்கு ஆசியாவில் போர் தீவிரம் அடைந்துள்ளபோதிலும் இந்தியாவில் சமையல் எரிவாயு, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்படாது என மத்திய அரசு உறுதியளித்திருப்பது ஆறுதல் அளிக்கிறது. ஈரான் மீதான அமெரிக்க இஸ்ரேல் போரினால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள எரிசக்தி விநியோகப் பாதிப்பு, அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, வளைகுடா நாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பு உள்ளிட்டவை தொடர்பாக டெல்லியில் அனைத்துக் கட்சிக் கூட்டம் 25இல் மத்திய அரசால் நடத்தப்பட்டது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், உள்துறை அமைச்சர் அமித் ஷா, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்டோருடன் சில எதிர்க்கட்சித் தலைவர்களும் பங்கேற்றனர். ஹார்முஸ் நீரிணை வழியாகப் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிசெய்தல், உள்நாட்டு எரிவாயு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் எரிபொருள் தட்டுப்பாட்டைத் தடுத்தல் உள்ளிட்டவற்றுக்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

# "முதல்வரின் தொகுதி என்றால் மற்றக் கட்சியினர் பிரச்சாரம் செய்யக் கூடாதா?" தவெக கண்டனம்



சென்னை, மார்ச்.,31-
விஜய்க்கு அனுமதி மறுத்துவிட்டு திமுக தலைவர் ஸ்டாலினுக்கு மட்டும் ஒருதலைபட்சமாக திறந்தவெளி வாகன பிரச்சாரத்திற்கு அனுமதி அளித்திருப்பது ஜனநாயகத்தை கேலிகூத்தாக்கும் செயலாகும் என தவெக கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து தவெக தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில், "பிரச்சாரத்திற்கு முறையாக அனுமதி பெற்றும் ஒரு பிரச்சார இடத்தில் இருந்து இன்னொரு பிரச்சார இடத்திற்கு நான் செல்லும் வழியில், காவல்துறை பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து முறைபடுத்துதல் கொஞ்சம்கூட இல்லாததால் எனது பிரச்சார வாகனம் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்ல இயலாத பாதுகாப்பற்ற சூழல் உருவாக்கப்படுகிறதா? என்கிற ஐயம் ஏற்படுகிறது. சென்னை மாநகர காவல்துறையின் இத்தகைய, ஒருதலைபட்சமான நடவடிக்கைகளின் மீது தேர்தல் ஆணையம் உடனடியாக தலையிட்டு பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து முறைபடுத்துதலை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும். அவ்வாறு செயல்படாத அதிகாரிகள் மீது துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அத்தோடு எனக்கு அனுமதி மறுத்துவிட்டு திமுக தலைவர் ஸ்டாலினுக்கு மட்டும் ஒருதலைபட்சமாக திறந்தவெளி வாகன பிரச்சாரத்திற்கு அனுமதி அளித்திருப்பது ஜனநாயகத்தை கேலிகூத்தாக்கும் செயலாகும். எனது பிரச்சார செயல்பாடுகள் சார்ந்த அரசின் பொறுப்புகளை தட்டிக்கழித்து, முறையாக பிரச்சாரங்களை மேற்கொள்ளும் சூழலை முடக்க கபட நாடக திமுக அரசுக்கு துணைபோகும் அதிகாரிகள் மீது தேர்தல் ஆணையம் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்" இவ்வாறு விஜய் தெரிவித்துள்ளார். மேலும், தவெக இணைப் பொதுச் செயலாளர் சி.டி.ஆர் நிர்மல் குமார் தனது எக்ஸ் பக்கத்தில், "தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தேர்தல் பிரச்சாரத்திற்கு மைக் மற்றும் பாக்ஸ் ஸ்பீக்கர்களை பயன்படுத்தத் தடை விதிப்பதா? முதலமைச்சரின் தொகுதி என்றால் மற்றக் கட்சியினர் பிரச்சாரம் செய்யக் கூடாதா? திமுக தலைவர் ரோடு ஷோ நடத்தலாம், ஆனால் தமிழக வெற்றிக் கழகத் தலைவர், மைக்குடன் பிரச்சாரம் செய்ய அனுமதி மறுப்பதா? அதிகாரிகள் ஒருதலைபட்சமாக செயல்படுவதை தேர்தல் ஆணையம் ஆதரிக்கிறதா? கழகத் தலைவரின் பிரசாரத்திற்கு முறையாக அனுமதி பெற்றும், இன்று மதியம், தவெக தலைவர் அங்கு சென்றடையும் வரைக்கும், மாலை முதலமைச்சர் வருகிறார் என்று காரணம் கூறி பிரச்சார இடத்தில் இரும்பாலான தடுப்புகள் கொண்டு (ஙிணீக்ஷீக்ஷீவீ நீணீபீமீ௳) பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய அனுமதிக்கவில்லை. தேர்தல் ஆணையத்திடம் முறையாக அனுமதி பெற்று நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தால், முதலமைச்சர் வருகிறார் என்று கூறி பிரச்சாரத்திற்கு தடை விதிப்பது கண்டனத்திற்குரியது. திமுகவின் கைப்பாவையாக அதிகாரிகள் செயல்படுகிறார்கள். தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் போது, அதிகாரிகள் பாரபட்சமாக நடந்துகொள்வது ஏன்? ஒருதலைபட்சமாக செயல்படும் அதிகாரிகள் மீது தேர்தல் ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். முறையாக அனுமதி பெற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், தவெக தலைவர் விஜய் கொளத்தூர் தொகுதி பிரசாரத்திற்கு, கடுமையாகப் போராடி, அதிகாரிகளிடம் பலகட்டங்களாக பேச்சுவார்த்தை நடத்திப்பட்ட பிறகே மைக், ஸ்பீக்கர் பாக்ஸ் உள்ளிட்டவைகளை பயன்படுத்த அனுமதி பெறுவதுதான் முறையா? ஒருதலைபட்சமாக செயல்படும் அதிகாரிகள் மீது தேர்தல் ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# தென்காசியில் குருத்தோலை ஞாயிறு!" பவனியில் திரளான இறை மக்கள் எதிரொலித்த 'ஓசன்னா' கீதம்

தென்காசி மார்ச். 31- கிறிஸ்தவர்களின் 40 நாள் தவக்காலத்தின் முக்கிய நிகழ்வான புனித வாரம், குருத்தோலை ஞாயிறு தினத்துடன் தொடங்கியது. தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் இதையொட்டி பிரம்மாண்டமான குருத்தோலை பவனி நடைபெற்றது. தென்காசி புனித மிக்கேல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் குருத்தோலைகள் மந்திரிக்கப்பட்டு, இறை மக்களிடம் வழங்கப்பட்டன. அங்கிருந்து தொடங்கிய பவனி, நகரின் முக்கிய வீதிகள் மற்றும் திருநெல்வேலி பிரதான சாலை வழியாகச் சென்று திருத்தலத்தை வந்தடைந்தது. கைகளில் குருத்தோலைகளை ஏந்தியபடி மக்கள் பாடிய 'ஓசன்னா' கீதம் விண்ணைப் பிளந்தது. திருத்தல அதிபர் ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற சிறப்புத் திருப்பலியில், பாளையங்கோட்டை ஆயர் இல்ல வேந்தர் சேவியர் அடிகளார் கலந்துகொண்டு, "ஓசன்னா என்றால் ஆண்டவர் வெற்றி தருவார்" என்ற பொருளில் சிறப்பான மறையுரை ஆற்றினார். யோசேப்புக்கு அர்ப்பணமானவர்கள் சபையின் குருமட அதிபர் ஜாய் கல்லரக்கல் அடிகளாரும் இதில் பங்கேற்றார். இந்நிகழ்வில் அமலவை அருட்சகோதரிகள், பங்கு பேரவையினர் மற்றும் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இறை மக்கள் பக்திப் பரவசத்துடன் கலந்துகொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு, எடப்பாடியாரால் அறிவிக்கப்பட்ட அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சங்கரன்கோவில் சட்டமன்ற வேட்பாளர் திலீபன் ஜெய்சங்கர், பன்னிரண்டாவது வார்டு 29 ஆவது பூத் மக்களுடன் பாரதிய ஜனதா கட்சி சங்கரன்கோவில் நகர செயலாளர் ஆர்.மனோஜ் குமார் தலைமையில் சட்டமன்ற வேட்பாளரை சந்தித்த தருணம்.



## "ஜமாத் கமிட்டிகளின் ஏகோபித்த ஆதரவு!"

# திமுக வேட்பாளர் ராஜாவுக்கு முஸ்லிம் லீக் அலுவலகத்தில் வரவேற்பு



புளியங்குடி மார்ச். 31- 2026 சட்டமன்றத் தேர்தலில் வாசுதேவநல்லூர் தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் ராஜா எம்எல்ஏவுக்கு, புளியங்குடி நகரத்தில் பல்வேறு தரப்பினர் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

*கூட்டணி கட்சிகளின் வரவேற்பு:* புளியங்குடி நகர முஸ்லிம் லீக் அலுவலகத்தில் நகரத் தலைவர் இ.மை. அப்துல் ரகுமான் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து காங்கிரஸ், சிபிஐ, தமுமுக மற்றும் எஸ்டிபிஐ கட்சி அலுவலகங்களுக்கும் வேட்பாளர் நேரில் சென்று ஆதரவு திரட்டினார். இந்நிகழ்வில் திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் யூ.எஸ்.டி. சீனிவாசன், நகரச் செயலாளர்கள் அந்தோணிசாமி, நாகூர் கனி உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் பங்கேற்றனர்.

* ஆன்மீகப் பெரியோர்களின் வாழ்த்து:* மேல பள்ளிவாசல் ஜமாத் கமிட்டி தலைவர் பி.என்.எம். மௌலல் கௌமி மற்றும் கீழ பள்ளிவாசல் ஜமாத் கமிட்டி தலைவர் இ.ரெசவுப்பா ஆகியோர் தலைமையில் வேட்பாளருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பள்ளிவாசல் தலைமை இமாம் ஜே. கலீல் ரகுமான் ஆலிம் வேட்பாளருக்குச் சால்வை அணிவித்து வாழ்த்தினார்.




■ ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில், பனங்காட்டு படை கட்சி சார்பில் போட்டியிட அக்கட்சியின் மாநில தலைவர் ஜெ ராக்கெட் ராஜா மனு செய்த போது.




# சின்னாளபட்டியில் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தில் குவிந்த மாற்றுக் கட்சி நிர்வாகிகள்

சின்னாளபட்டி மார்ச். 31 - திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி அக்ஷயா நகரில் உள்ள தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் மாநிலத் தலைமை அலுவலகத்தில் பிரம்மாண்ட அரசியல் இணைப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவில், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் நந்தகுமார் தலைமையில் 30க்கும் மேற்பட்டோரும், தமிழக வெற்றிக் கழகத்தைச் (த.வெ.க) சேர்ந்த 20க்கும் மேற்பட்ட தொண்டர்களும் தங்களை அந்த இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர். இயக்கத்தின் நிறுவனர் எஸ். கிருபாகரன்க்கு சால்வை அணிவித்து, தங்களை அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர். புதிதாக இணைந்தவர்களை வாழ்த்திப் பேசிய எஸ். கிருபாகரன், "இன்று இளைஞர்கள் தங்களின் பலம் தெரியாமல் எங்கோ இருக்கும் தலைவர்களுக்காக வாழ்க்கையை இழக்கின்றனர். ஆபத்து காலத்தில் உங்கள் அருகில் இருக்கும் தலைவன்தான் உதவ முடியும். என் மீது நம்பிக்கை வைத்து வந்திருக்கும் உங்களைக் காக்க நான் எப்போதும் முன்னிற்பேன்" என்று உணர்ச்சிப்பூர்வமாகப் பேசினார். நிகழ்;ச்சியில் மாநில செயலாளர் அருண்குமார், துணைத் தலைவர் யோகேஸ்வரன், மாநில இணைச் செயலாளர் முருகபிரபு, மாநில இளைஞரணி தலைவர் தினகரன், மாநில தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சிலம்பரசன், ஆத்தூர் ஒன்றிய இளைஞரணி செயலாளர் சக்திசரவணன் உட்பட தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# திருப்பூரில் மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை நிறுவனர் வினோத்குமார் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

திருப்பூர் மார்ச் 31: திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு, அரசு அங்கீகாரத்துடன் செயல்படத் தொடங்கியுள்ள **'மக்கள் பொது மனத சமூக சேவை அறக்கட்டளை'**யின் முதல் கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பெரியார் காலனி பகுதியில் நடைபெற்றது.

* நிகழ்வின் சிறப்பம்சங்கள்:* அறக்கட்டளையின் நிறுவனர் வினோத்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக உயிர் ஆர்கானிக் சுஜிதா தேவ விஷ்ணு மற்றும் பிரபஞ்ச அறக்கட்டளை நிறுவனர் தங்கமணி ராமன் ஆகியோர் கலந்துகொண்டனர். அமைப்பின் உறுப்பினர்களுக்குச் சமூக சேவை குறித்த விழிப்புணர்வு உரையாற்றி, அறக்கட்டளையின் பணிகளுக்குத் தங்களது ஆதரவைத் தெரிவித்தனர். நலத்திட்ட உதவிகள்: விழாவின் முக்கிய நிகழ்வாக, மாற்றுத்திறனாளிகளுக்கும், கைவிடப்பட்ட முதியவர்களுக்கும் நிதியுதவி மற்றும் அத்தியாவசிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், அறக்கட்டளையின் புதிய நிர்வாகிகளுக்கு அதிகாரப்பூர்வ அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள்: தலைமைத் தலைவர் முருகானந்தம், பொதுச் செயலாளர் பாபு, துணைச் செயலாளர் முனியப்பன், பொருளாளர் பழனிச்சாமி, துணைப் பொருளாளர் சக்திவேல், ஒருங்கிணைப்பாளர் கணேசகுமார், மாவட்டத் தலைவர்கள் சதீஷ் (வடக்கு), ஈஸ்வரமூர்த்தி (தெற்கு) மற்றும் மாவட்ட ஓட்டுநர் சங்கத் தலைவர் மணிகண்டன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியைத் தொகுப்பாளர் பியூலா சிறப்புடன் தொகுத்து வழங்கினார்.



# எலெக்ஷன் நேரத்தில் கட்சி மாறிய கோவை கவுன்சிலர் மீது பொதுமக்கள் கடும் கொந்தளிப்பு

கோவை மார்ச். 31-: கோவை மாநகராட்சி 77வது வார்டு திமுக கவுன்சிலர் ராஜலட்சுமி, தனது கணவருடன் சென்னை சென்று எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தது கோவை அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

* ராஜலட்சுமியின் குற்றச்சாட்டு:* 15 ஆண்டுகளாக திமுகவில் இருந்த தனக்குக் கட்சியில் பெண்களுக்கு உரிய மரியாதை வழங்கப்படவில்லை என்றும், செல்வபுரம் பகுதி செயலாளர் கேபிள் மணி மற்றும் மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி ஆகியோர் குறித்து அதிரடியான புகார்களையும் அவர் முன்வைத்துள்ளார்.

* பொதுமக்கள் போராட்டம்:* இதைக்கண்டித்து செல்வபுரம் பகுதியில் திரண்ட பொதுமக்கள், கவுன்சிலர் ராஜலட்சுமிக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். "வார்டில் எந்தப் பணியும் செய்யாமல், எல்லாம் செய்துவிட்டதாகப் பொய் கூறுகிறார்" என்றும் அவர் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.



■ சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோவில் தேரோட்டத்தை முன்னிட்டு தமிழ்நாடு நாடார் சங்கம் சார்பாக நடைபெற்ற அன்னதானத்தை தமிழ்நாடு நாடார் சங்க தலைவர் ஜெ. முத்து ரமேஷ் நாடார் தொடங்கி வைத்தார். அருகில் தமிழ்நாடு நாடார் சங்க பொதுச் செயலாளர் ஆனைகுடி வீரகுமார் மற்றும் பலர் உள்ளனர்.
















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000